ஜெயம்கொண்டத்திற்கு முன்சீப் கோர்ட்

* 221 வின—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் நகரத்தில் ஜில்லா முன்சீப் கோர்ட் ஒன்று ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவினர் அங்கு வந்து விசாரித்தபொழுது, பொதுமக்களும் மற்ற அரசியல் தலைவர்களும் அது அவசியமானது என்று எடுத்துக்கூறி இருப்பதால், அதைக் கொண்டு வருவதற்கு இனி யாவது அரசு பரிசிலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதிமன்றம் அந்த கோரிக்கையைப் பரிசிலித்து, பரிந்துரை செய்யுமாறல் கவனிக்கலாம்.

கழிவுநீர்க் குழாய்கள் தயாரிப்பு

* 222 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

பெரம்பலூர் லால்குடி வட்டங்களில் கிடைக்கும் களிமண்ணை வெட்டி எடுத்து கழிவு நீர்க் குழாய்கள் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பெரம்பலூர் வட்டத்திலும், லால்குடி வட்டத்திலும் நிறைய களிமண் கிடைக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியில் குழாய் தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை துவங்க அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தின் சார்பிலே இப்பொழுது திட்டம் இல்லை.